THRU the BIBLE

ஆபிரகாமுடன்
தேவன் செய்த உடன்படிக்கை

பகுதி 3 - ஆதியாகமம் 11:10 - 17



சந்தியுங்கள் பகிருங்கள் வளருங்கள்

ஒன்றாகக் கூடுங்கள், படித்ததைப் பகிர்ந்துகொள்ளுங்கள்,
ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டுங்கள்



வாரம் ஒருமுறை

கூடிவரும்போது செய்ய வேண்டியவை



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் இந்தப் பாடத்தை பயன்படுத்துவது எவ்வாறு?



ஜெபத்துடன் தொடங்குங்கள்: நீங்கள் ஒவ்வொரு பாடத்தையும் படிக்கத் தொடங்குவதற்கு முன்னும், “கர்த்தாவே, இதைப் படிப்பதின் வாயிலாக, கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அறிவிலும் வளர உதவுங்கள்” என்று ஜெபியுங்கள்.



கொடுக்கப்பட்ட வேதபகுதியை வாசியுங்கள்: தேவனுடைய வார்த்தையின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்காக உங்கள் கண்களைத் திறக்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்: நீங்கள் படித்த பகுதியின் பொருள், பின்னணி, மற்றும் தனிப்பட்ட நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து சிந்திப்பதற்காக வழங்கப்பட்ட வேதவாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்.



ஒவ்வொரு பாடத்தைப் படித்த பிறகும் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைக் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்: வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைப் பற்றி சிந்தியுங்கள். ஒவ்வொரு போதனையைக் கற்றுக்கொண்ட பிறகும் தனிப்பட்ட சிந்தனைக் கேள்விகள் மற்றும் நடைமுறைக் கேள்விகளைப் பற்றி உங்கள் குழுவினருடன் கலந்து ஆலோசியுங்கள்.



டாக்டர் வெர்னோன் மெக்கியின் போதனைகளைக் கேளுங்கள்: டாக்டர் வெர்னோன் மெக்கியின் அனைத்துப் போதனைகளையும் படிக்க விரும்பினால் TTB.org என்று இணையதளத்துக்குச் சென்றோ அல்லது கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்தோ அல்லது யூடியூப்-ல் சென்றோ கேட்டும் வாசித்தும் கற்றுக்கொள்ளலாம்.



பரிந்துரைக்கப்படுகிற இடைநிறுத்தம் மற்றும் மறுதொடக்க ஐகானைப் பயன் படுத்தவும். இது அதனுடைய உள்ளடக்கத்தை கருத்துடனும் அதேவேளையில் உங்கள் சொந்த விருப்பத்திற்கு ஏற்றாற்போல் தொடர்ந்து படிக்கவும் வழிகாட்டும்.

உங்களுடைய சிந்தனைக்கு

வேத வாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் இந்தப் பாடத்தை எவ்வாறு பயன்படுத்துவது? — பக்கம் 4

தேவனுடைய மாறாத திட்டம் *(ஆதியாகமம் 11:10 - 12:9)* — பக்கம் 7

தேவனுடைய பராமரிப்பில் விசுவாசம் வைத்தல் *(ஆதியாகமம் 12:10 - 13:13)* — பக்கம் 21

வாக்குத்தத்தம்,போர், மற்றும் உத்தமம் *(ஆதியாகமம் 13:14 - 14:24)* — பக்கம் 35

ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கை *(ஆதியாகமம் 15)* — பக்கம் 51

ஆபிராமின் விசுவாசம் *(ஆதியாகமம் 16)* — பக்கம் 65

உடன்படிக்கை உறுதிப்படுத்தப்படுதல் *(ஆதியாகமம் 17)* — பக்கம் 81


தேவனுடைய
மாறாத திட்டம்
ஆதியாகமம் 11:10 - 12:9

தேவனுடைய மாறாத திட்டம்

அன்புள்ள பரலோக பிதாவே,

சேம் முதல் ஆபிரகாம் வரையிலான தலைமுறையினருக்கு நீர் காட்டிய உம்முடைய உண்மைத்தன்மையின் பதிவுகளுக்காக உமக்கு நன்றி. உம்முடைய வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் பொய்யாவதில்லை என்பதை நினைவூட்டியதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் செல்லும் பாதை எங்கே முடியும் என்று நிச்சயமாகத் தெரியாதபோதிலும் உம்மீது நம்பிக்கை வைக்க எங்களுக்குக் கற்றுத்தாரும். நாங்கள் சுயத்தைச் சார்ந்து வாழாதபடிக்கு எங்கள் இருதயங்களைக் காத்துக்கொள்ளும். நீர் நடத்தும் பாதையின் முழு விவரங்களும் எங்களுக்குத் தெரியாவிட்டாலும் உம்மைப் பின்பற்றும் விசுவாசத்தை எங்களுக்குத் தாரும். ஆபிரகாமைப் போலவே, எங்கள் வாழ்க்கையும் உம்முடைய உடன்படிக்கையின் கிருபையை வெளிப்படுத்தும் ஆராதனைப் பலிபீடங்களாக மாறட்டும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

சேம் முதல் ஆபிராம் வரையிலான சந்ததியினர்

ஆதியாகமம் 11:10-32



"நம்முடைய நாட்களிலும் தேவனுக்கு விரோதமாக நிற்கும் அநேக ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று ஒரு சிறிய பாபேல் கோபுரத்தைக் கட்டியிருக்கிறார்கள்."

– டாக்டர் ஜே. வெர்னோன் மெக்கீ


தேவனுடைய மாறாத திட்டம்

ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, வேதாகமம் நோவாவின் குமாரனாகிய **சேமின் வம்சாவளியை** முன்னிலைப்படுத்துகிறது. இவர்களின் வழியாகவே தேவனுடைய **மாறாத வாக்குத்தத்தம்** தொடர்ந்தது. இப்பகுதியில், பல்வேறு தலைமுறைகள் மற்றும் அவர்களின் தந்தை-மைந்தர்களின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியல் இருப்பது போலத் தோன்றினாலும், இது **தேவன் தமது மாறாத மீட்பின் திட்டத்தை இவர்கள் மூலமாக உண்மையுடன் முன்னெடுத்துச் சென்றதையே காட்டுகிறது.**

இந்த வம்சாவளி நம்மை தேராகுவுக்கு நேராக நடத்துகிறது. தேராகுவுக்கு ஆபிராம் (ஆபிரகாம்), நாகோர், ஆரான் ஆகிய மூன்று குமாரர் இருந்தனர். ஆபிராம் சாராயை (சாராள்) விவாகம் பண்ணினான். சாராய் மலடியாய் இருந்தபடியால் அவளுக்குப் பிள்ளை இல்லை. இது ஈசாக்கின் அற்புதமான பிறப்பிற்கு வழிவகுத்தது.

மனித ஆற்றல் எங்கே செயலற்றதாக முடிந்துபோகிறதோ அங்கே தேவன் அடிக்கடியாகத் தமது உன்னதமான கிரியைகளைத் தொடங்குகிறார்.

வரலாற்றின் இக்கட்டமும், ஏற்கனவே மனிதகுலம் மீண்டும் மீண்டும் செய்த மூன்று அடிப்படைப் பாவங்களை வெளிப்படுத்தியுள்ளது:



ஜீவனத்தின் பெருமை
தன் பாவத்திற்காக மனந்திரும்ப மறுத்த **காயீனிடம்** இது காணப்பட்டது.

மாம்சத்தின் இச்சை
இது **ஜலப்பிரளயத்திற்கு** முந்தைய நாட்களில், பூமியை நிரப்பியிருந்த கொடுமையிலும் சீர்கேட்டிலும் வெளிப்பட்டது

கலகம் அல்லது கிளர்ச்சி
பாபேல் கோபுரத்தில் தேவனுடைய கட்டளையை மீறி தங்களுக்கு மகிமையைத் தேடியபோது இது வெளிப்பட்டது.


"பாபேல் நிகழ்வுக்குப்" பின் மக்கள் சிதறடிக்கப்பட்டு, அவர்களுடைய இருதயங்கள் கடினப்பட்ட போதிலும், தேவன் ஒரு மனிதன் மற்றும் ஒரு குடும்பத்தின் மீது தமது கவனத்தைச் செலுத்தினார். இந்தக் குடும்பத்தின் மூலமாக பூமியிலுள்ள சகல ஜனங்களையும் அவர் ஆசீர்வதிக்கப்போகிறார்.

தேராகுவின் பயணமும் தாமதமும்

தேராகு, 'ஊர்' என்னும் செழிப்பான கல்தேயப் பட்டணத்தை விட்டு கானான் தேசத்திற்குப் புறப்பட்டான். ஆபிராம், சாராய் மற்றும் தன் பேரன் லோத்து ஆகியோரையும் அவன் அழைத்துச் சென்றான்.

ஆனால், அவர்கள் சேர வேண்டிய இடத்திற்குச் செல்லாமல், 'தாமதம்' என்று பொருள்படும் 'ஆரான்' என்ற இடத்திலேயே தங்கிவிட்டனர்." ஆரானில் அவர்கள் பல ஆண்டுகள் குடியிருந்தார்கள். அங்கேயே தேராகு மரித்தான்.

இந்தத் தாமதம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைத் தடுத்துவிடவில்லை. இப்போது ஆபிராமிடம் தேவன் பேசுவதற்குத் தேவையான சூழல் உருவானது. இது ஆதியாகம புத்தகத்திலும், இரட்சிப்பின் வரலாற்றிலும் ஒரு முக்கிய திருப்புமுனையின் நிகழ்வாகும்.



ஆதியாகமத்தில் ஒரு முக்கிய திருப்புமுனை

ஆபிரகாமின் வம்சாவளி மூலம் **ஒவ்வொரு ஜாதிக்கும் நம்பிக்கையையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும் தேவனுடைய திட்டத்தை** இது வெளிப்படுத்துகிறது; இது இறுதியில் **மேசியாவிற்கு** நேராக வழிநடத்துகிறது.



ஆதியாகமம் 1-11

சுமார் 2000 ஆண்டுகள்

உலகளாவிய வரலாறு: சிருஷ்டிப்பு, வீழ்ச்சி, ஜலப்பிரளயம் மற்றும் பாபேல் கோபுரம்.



ஆதியாகமம் 12-50

சுமார் 350 ஆண்டுகள்

ஆபிரகாமின் விசுவாசக் குடும்பத்தை மையமாகக் கொண்ட **ஓர் உடன்படிக்கையின் கதை**

ஆபிரகாமுக்கும் அவரது சந்ததியினருக்கும் தேவன் அளித்த வாக்குத்தத்தங்கள் மூலமாக அவருடைய **மீட்பின் திட்டம்** வெளிப்படுகிறது.

சிந்தித்தல்

கேள்வி 1

ஜீவனத்தின் பெருமை, மாம்சத்தின் இச்சை மற்றும் பிடிவாதமான சுயசித்தம் ஆகியவை உங்கள் வாழ்க்கையில் எங்கே செயல்படுவதைக் காண்கிறீர்கள்?

செயல்படுத்துதல்

கேள்வி 2

தேராகு ஆரானில் தங்கியதால், கானான் தேசத்தை நோக்கிய பயணத்தைத் தாமதப்படுத்தினான்.

தேவனுடைய அழைப்பிற்கு முழுமையாகக் கீழ்ப்படியாமல் ஏதேனும் ஓரிடத்தில் நீங்கள் தேங்கி நிற்பதால், உங்கள் ஆவிக்குரிய பயணத்தில் ஏதேனும் "தாமதங்கள்" உள்ளனவா?

உங்களது "ஆரானை" விட்டு வெளியேறி, தேவனுடைய வழியைப் பின்பற்ற இன்று நீங்கள் எடுக்கக்கூடிய ஒரு சாத்தியமான காரியம் என்ன?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

ஆபிராமுக்கு தேவன் அருளிய வாக்குத்தத்தங்கள்

ஆதியாகமம் 12:1-9

> ஆதியாகமம் 12-ஆம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்கள் ஆபிரகாமுக்கு (ஆபிராம்) தேவன் கொடுத்த மூன்றடுக்கு வாக்குத்தத்தத்தை நமக்குத் தருகின்றன; உண்மையில் இதுவே வேதாகமத்தின் அச்சாணி. வேதாகமத்தின் மற்ற பகுதிகள் அனைத்தும் இந்த மூன்றடுக்கு வாக்குத்தத்தத்தின் விரிவாகவே அமைந்துள்ளன.

"**ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது**" (ரோமர் 4:3).

தேவன், **முழு மனித குலத்தையும்** பொதுவாகக் கையாளுவதற்குப் பதிலாக, **ஆபிராமை** தமது நோக்கங்களுக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பெரிய **ஜாதிக்குத் (இனத்துக்குத்) தகப்பனாகும்படி** அழைக்கிறார்.

ஆபிராம் தான் ஒருபோதும் பார்த்திராத ஒரு தேசத்திற்குப் பயணம் செய்ய, தன் **தேசத்தையும், தன் இனத்தையும், தன் தகப்பனுடைய வீட்டையும்** விட்டுப் புறப்படக் கட்டளையிடப்பட்டார்.

ஆயினும், இந்த அழைப்போடு கூடவே தேவனுடைய **மூன்றடுக்கு வாக்குத்தத்தமும்** வந்தது; இதுவே வேதாகமத்தின் எஞ்சிய பகுதியை வடிவமைக்கும் உடன்படிக்கையின் இதயமாகும்.

தேவனுடைய மூன்றடுக்கு வாக்குத்தத்தம்



ஒரு தேசம்: தேவன் ஆபிராமுக்கு **ஒரு தேசத்தைக் காண்பித்து, அவனுடைய சந்ததிக்குக் கொடுப்பதாக** வாக்களித்தார்.



ஒரு ஜாதி (இனம்): தேவன் **ஆபிராமின் சந்ததியினரை ஒரு பெரிய இனமாக்கி**, அவனது **பெயரைப் பெருமைப்படுத்துவேன்** என்றார்.



ஓர் ஆசீர்வாதம்: ஆபிராம் மூலமாக, "**பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.**" ஆபிரகாமின் வம்சத்தில் வந்த **மீட்பரான இயேசு கிறிஸ்துவுக்குள் இந்த ஆசீர்வாதம் இறுதியாக நிறைவேறும்.**

ஆபிரகாமின் மேன்மை அவருடைய **அந்தஸ்திலோ அல்லது ஆஸ்தியிலோ காணப்படவில்லை**; மாறாக, அவருடைய **விசுவாசத்திலேயே** காணப்பட்டது. தான் எங்கே போகிறோம் என்று தெரியாதபோதும் கீழ்ப்படியுமளவுக்கு அவர் தேவனை முழுமையாக நம்பினார். **ஊர்** என்ற பட்டணத்தின் **வசதிகளையும் நாகரிகத்தையும்** விட்டுவிட்டு, அவர் கரடுமுரடான கானான் தேசத்திற்குள் நுழைந்தார். எந்தவொரு **உலகப் பாதுகாப்பையும் விட, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதே மேலானது என்று அவர் விசுவாசித்தார்.**

அந்தத் தேசத்திற்கு வந்தவுடன், **ஆபிராமின் செயல்கள் அவரது இருதயத்தின் நிலையை வெளிப்படுத்தின.** அவர் **ஒரு கூடாரத்தை** அமைத்தார்; இது அவர் இவ்வுலகில் ஒரு பரதேசியாகத் தேவனைச் சார்ந்து வாழ்வதைக் குறித்தது. அவர் எங்கே குடியேறினாலும் **கர்த்தருக்குப் பலிபீடங்களைக் கட்டினார்**; இதன் மூலம் ஆராதனையின் சாட்சியை அங்கே நிலைநாட்டினார்.

அவருடைய கீழ்ப்படிதல் தேவனோடு அவருக்கு இருந்த ஆழமான ஐக்கியத்திற்கு வழிவகுத்தது. கர்த்தர் அவருக்கு மீண்டும் தரிசனமாகி, தமது வாக்குத்தத்தங்களை உறுதிப்படுத்தினார்.

ஆபிரகாமின் பயணம், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்மை **விசுவாசத்தில் முன்நடத்தவும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவும், நம்முடைய நம்பிக்கையை அவர்மீது நங்கூரமிட்ட பரதேசிகளாக வாழவும் நம்மை அழைக்கிறது** என்பதைக் காட்டுகிறது.



சிந்தித்து செயல்படுத்துதல்

கேள்வி 1

தேவனுடைய அழைப்பைப் பின்பற்றுவதற்காக, ஆபிராம் தனது தாய்நாட்டின் பாதுகாப்பைத் துறந்து வெளியேறினார்.

தேவனை முழுமையாக நம்புவதற்காக, உங்கள் வாழ்க்கையின் எந்தெந்த வசதிகளை அல்லது பாதுகாப்புகளை விட்டுவிடுமாறு அவர் இன்று உங்களிடம் கேட்கக்கூடும்?

கேள்வி 2

ஆபிராம் தான் சென்ற இடமெல்லாம் பலிபீடங்களைக் கட்டி, ஆராதனையின் சாட்சியை விட்டுச் சென்றார்.

மற்றவர்களுக்குத் தேவனுடைய சமூகத்தைச் சுட்டிக்காட்டும் விதமாகவோ, அல்லது தேவனோடு நீங்கள் செலவிட்ட நெருக்கமான நேரத்தை நினைவூட்டும் விதமாகவோ, ஓர் "ஆவிக்குரிய பலிபீடத்தை" உங்கள் அன்றாட வாழ்க்கையில் அமைப்பது எப்படி இருக்கும்?

கேள்வி 3

முன்னே செல்லும் பாதை நிச்சயமற்றதாகத் தெரிந்தாலும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்ட நீங்கள் எடுக்கப்போகும் ஒரு செயலை எழுதுங்கள்.

வரைபட காட்சிச் சுருக்கம்



1 **தேராகு** ஆபிராம், சாராய் மற்றும் லோத்து ஆகியோரை கல்தேயருடைய **ஊரிலிருந்து கானான்** தேசத்தை நோக்கி அழைத்துச் சென்றான்.

2 **தேராகு ஆரானில்** தங்கி விட்டான், அங்கே அவன் தனது 205-வது வயதில் மரித்தான்.

3 **ஆபிராம்** சீகேமில் ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

4 **ஆபிராம் பெத்தேலில்** ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“நண்பர்களே நீங்கள் எத்தகைய சாட்சியைக் கொண்டிருக்கிறீர்கள்? சாட்சியை நிரூபிக்க உங்கள் வீட்டின் முன் துண்டுப் பிரசுரங்களை ஒட்டிவைக்க அவசியமில்லை; உங்கள் காரில் “இயேசு இரட்சிக்கிறார்” என்ற ஸ்டிக்கரை ஒட்ட வேண்டிய கட்டாயமும் இல்லை (சிலர் செய்வது போல ஸ்டிக்கரை ஒட்டிவிட்டு, நெடுஞ்சாலையில் மற்றவர்களுக்கு இடையூறாக வண்டியை ஓட்டுவது) இவை எவ்விதத்திலும் சாட்சி ஆகாது!”


தேவனுடைய பராமரிப்பில்
விசுவாசம் வைத்தல்
ஆதியாகமம் 12:10 - 13:13

தேவனுடைய பராமரிப்பில் விசுவாசம் வைத்தல்

அன்புள்ள பரலோக பிதாவே,

பஞ்சம் எங்களைச் சோதிக்கும்போதும், பயம் எங்களைத் தூண்டும் போதும், எங்களுக்கு முன்பாக பல வாய்ப்புகள் இருக்கும்போதும் உம்மையே நம்ப எங்களுக்குக் கற்றுத்தாரும். எங்கள் சுயபுத்தியின் மேல் சாயாதபடி எங்களைக் காத்துக்கொள்ளும். நாங்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க உதவிசெய்யும். அப்பொழுது எங்கள் வாழ்க்கை உம்முடைய வாக்குத்தத்தங்களுக்குச் சாட்சியாக விளங்கும். நாங்கள் வழிதவறிப் போகும்போது, ஆராதனையின் பலிபீடத்திற்கு நேராக எங்களைத் திரும்பவும் வழிநடத்தும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

ஆபிராமின் விசுவாசக் குறைவு

ஆதியாகமம் 12:10-20

"இன்று உலகம் கிறிஸ்தவர்களை ஈர்க்கும் விதம் ஆச்சரியமளிக்கிறது. சபைக்கு வராமல் இருப்பதற்கு பலர் பல்வேறு காரணங்களைக்கூறி தங்களை நியாயப்படுத்துகிறார்கள். 'சகோதரன் மெக்கீ, திங்கட்கிழமை காலையில் எழுந்து வேலைக்குப் போக வேண்டியிருப்பதால் எங்களால் ஞாயிற்றுக்கிழமை இரவு சபைக்கு வர முடிவதில்லை' என்று அவர்கள் கூறுகிறார்கள்."

– டாக்டர். ஜே. வெர்னோன் மெக்கீ

பஞ்சமும் அதற்கான உலகத்தின் தீர்வும்

"அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிராம் எகிப்து தேசத்திலே சஞ்சரிக்கும்படி அவ்விடத்திற்குப் போனான்" (ஆதியாகமம் 12:10).

தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த தேசத்தில் ஆபிராம் வாழ்ந்த போதுதான் பஞ்சம் உண்டானது. ஒவ்வொரு நாளும் மேய்ச்சல் நிலங்கள் காய்ந்துபோயின, ஆடுகள் பலவீனமடைந்தன. பஞ்சம் எல்லா இடங்களிலும் பரவி வருவதாகப் பயணிகள் எச்சரித்தனர். அதேவேளையில் அவர்கள் எகிப்தின் தானியங்களையும் அதன் பசுமையான புல்வெளிகளைக் குறித்துப் பேசினார்கள். "ஒருவேளை எகிப்து நமக்கு ஆகாரத்தைத் தரலாம்" என்று ஆபிராம் எண்ணினான்.


எகிப்துக்குச் செல்வது அவருக்கு நியாயமானதாகவும், புத்திசாலித்தனமான முடிவாகவும் தோன்றியது. மற்றவர்களும் அங்கேதான் சென்றுகொண்டிருந்தார்கள். பயணிகளின் தகவல்களும் எகிப்தின் செழிப்பை உறுதிப்படுத்தின. "இங்கே பசுமையான புல்வெளிகள் இல்லை; ஆனால், எகிப்திலோ அவை ஏராளமாக இருக்கின்றன" என்று கூறி, ஆபிராம் தன் முடிவை மிக எளிதாக நியாயப்படுத்தியிருக்க முடியும். ஆயினும் ஒரு கேள்வி எழுகிறது:

எகிப்துக்குப் போகும்படி தேவன் ஆபிராமுக்குச் சொன்னாரா? நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமே அவனைச் சோதிப்பதற்கான தேசமாகவும் இருந்தது.



“அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது, தன் மனைவி சாராயை நோக்கி: ‘நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன்...’” என்று ஆபிராம் பயத்தினால் கூறினான். அவன் எகிப்து தேசத்தை நெருங்க நெருங்க அவருடைய பயம் அதிகரித்தது. அவர் மீண்டும் ஒரு முடிவை எடுக்க வேண்டியிருந்தது.



“அவன் தன் பிரயாணங்களிலே தெற்கேயிருந்து பெத்தேல் மட்டும், பெத்தேலுக்கும் ஆயீக்கும் நடுவாகத் தான் முன்பு கூடாரம்போட்டதும், தான் முதல் முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போனான்; அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்” (ஆதி. 13:3-4).

ஆபிராம் தான் முன்பு பலிபீடம் கட்டி தொழுகொண்ட பெத்தேலுக்குத் திரும்பினான். எகிப்து அவனுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்தது, ஆனால் ஐக்கியத்தைக் கொடுக்கவில்லை. ஆபிராம் மீண்டும் ஒருமுறை அந்த பலிபீடத்தில் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.



> “ஆபிராமுக்கும், கெட்ட குமாரனுக்கும் மட்டுமின்றி, தேவனிடத்திற்குத் திரும்ப விரும்பும் எந்தவொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் பலிபீடத்திற்கான வழி எப்பொழுதும் திறந்தே இருக்கிறது.”



சிந்தித்தல்

கேள்வி 1

நீங்கள் பற்றாக்குறையையும் நிச்சயமற்ற தன்மையையும் அல்லது துரிதமாகச் செயல்பட வேண்டிய அழுத்தத்தின் காலங்களையும் எதிர்கொள்ளும்போது, உங்கள் முடிவுகளை எது வழிநடத்துகிறது? தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தினால் நடத்தப்படுகிறீர்களா அல்லது பாதுகாப்பானதாகத் தோன்றும் நடைமுறைத் தீர்வுகளினால் நடத்தப்படுகிறீர்களா? ஏன்?

கேள்வி 2

நீங்கள் பயத்தினால் அவசரப்பட்டு முடிவெடுக்கும் ஒரு சூழ்நிலையை நினையுங்கள். உடனடியாகச் செயல்படாமல், சற்று அமைதியாக இருங்கள். அந்த நேரத்திற்காக ஜெபம் செய்யுங்கள். தேவன் உங்களை வழிநடத்துவார் என்று நம்பி, ஒரு தைரியமான முடிவை எடுங்கள். உங்களைப் பயமுறுத்தும் அரைகுறை உண்மைகளைத் (பொய்களைத்) தைரியமாக ஒதுக்கித் தள்ளுங்கள்.

செயல்படுத்துதல்

கேள்வி 3

தேவன் உங்களுக்கு ஒரு இரண்டாவது வாய்ப்பு கொடுத்த தருணத்தை நினைத்துப் பாருங்கள். அந்த அனுபவத்தைப் பற்றி ஒரு சில வரிகள் எழுதுங்கள் அல்லது ஒரு படம் வரைந்து காட்டுங்கள்.

ஆபிராம் மற்றும் லோத்து

ஆதியாகமம் 13:1-13

ஐசுவரியமும் வாக்குவாதமும்

“ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளையுடைய சீமானாயிருந்தான். ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக் கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தை மேய்ப் பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள்.” (ஆதியாகமம் 13:2, 5-7).





கானானியரும் பெரிசியரும் ஆபிராமுக்கும் லோத்துக்கும் இடையில் என்ன கண்டிருப்பார்கள்? ஒற்றுமையையும் ஐக்கியத்தையுமா? அல்லது பிரிவினையையும் சச்சரவையுமா?

ஐசுவரியம் பெரும்பாலும் குடும்பங்களில் வாக்குவாதத்தையும் சண்டையையுமே உருவாக்குகிறது.

தேவன் நம்மை ஐசுவரியத்தால் ஆசீர்வதிக்கும் போது, கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான ஓர் உதாரணத்தைக் காண்கிறோம்

“ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்” (ஆதியாகமம் 13:8-9).

மூத்தவன் என்ற முறையில், ஆபிராம் சிறந்த பசுமையான நிலத்தை உரிமை பாராட்டியிருக்கலாம். ஆனால் அதற்குப் பதிலாக அவன் தாழ்மையாக நடந்துகொண்டு தெரிவுசெய்யும் வாய்ப்பை லோத்துக்கு வழங்கினான்.

தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம், நியாயமாக நமக்குக் கிடைக்க வேண்டியதைத் தியாகத்துடன் விட்டுக் கொடுக்க நாம் ஆயத்தமாக இருக்கிறோமா?

லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, நீர்வளம் பொருந்திய செழிப்பான சமபூமியைக் கண்டான். அது அவனுக்கு எகிப்தை நினைவூட்டியது. புற்கள் பசுமையாக இருந்தன, ஆறுகள் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சின. ஆனால் அந்த அழகிற்கு அப்பால், பாவத்தில் மூழ்கியிருந்த சோதோம் இருந்தது. அவன் அங்கு குடியேறுகிறவரைக்கும், படிப்படியாகத் தன் கூடாரத்தை அதன் அருகில் அமைத்துக்கொண்டே சென்றான்.

நமது தெரிந்தெடுப்புகள் பசுமையான புல் வெளிகள் நிறைந்த செழிப்பான நிலத்தைச் சார்ந்து அமைந்திருக்கின்றனவா அல்லது தேவன் நம்மிடமிருந்து விரும்புவதின் அடிப்படையில் அமைந்திருக்கின்றனவா?

> “லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, சமபூமியைக் கண்டான். பிறகு அவன் அந்தத் திசையை நோக்கிச் சென்றான். அவன் தன் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு அதுதான்.”





சிந்தித்துத் செயல்படுத்துதல்

கேள்வி 1

உங்களது வாழ்க்கையில் மேலோட்டமாகப் பார்க்கும்போது கவர்ச்சிகரமானதாகத் தோன்றும், ஆனால் தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் சிறந்த வழியிலிருந்து உங்களைத் திசைதிருப்பக்கூடிய "பசுமையான வாய்ப்புகள்" எவை? அவற்றிற்கு இடையேயான வித்தியாசத்தை நீங்கள் எவ்வாறு கண்டறியலாம்?

கேள்வி 2

தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்பது என்பதை உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் எதைக் குறிக்கிறதாகக் கருதுகிறீர்கள்?

கேள்வி 3

உங்களோடு முரண்படுகிற ஒரு நபரையோ, குடும்ப உறுப்பினரையோ, ஒரு நண்பரையோ, சபையில் உள்ள ஒருவரையோ நினைத்துப் பாருங்கள். அந்த நபர்களோடு சமாதானமாவதற்கு நீங்கள் எதை விட்டுக்கொடுத்திருக்கிறீர்கள்?

வரைபட காட்சிச் சுருக்கம்



நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின்
மேற்கோள்



“எந்தவொரு மனிதனுக்கும் ஆவிக்குரிய வீழ்ச்சி என்பது திடீரென நிகழ்ந்துவிடுவதில்லை. அந்த வீழ்ச்சி ஏற்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும். ஆனால், எப்போது நீங்கள் உங்கள் கூடாரத்தின் திரையை விலக்கி, சோதோமுக்கு நேராக அதைப் போடுகிறீர்களோ, அந்தத் தருணமே உங்கள் வீழ்ச்சியின் தொடக்கமாக அமைகிறது.”


வாக்குத்தத்தம், போர்,
மற்றும் உத்தமம்
ஆதியாகமம் 13:14 - 14:24

வாக்குத்தத்தம், போர், மற்றும் உத்தமம்

அன்புள்ள பரலோக பிதாவே,

சொந்த முயற்சிகளினால் அல்ல, விசுவாசத்தினாலேயே மெய்யான ஆசீர்வாதம் வரும் என்பதை ஆபிராமின் வாழ்க்கையின் மூலம் எங்களுக்குக் கற்றுக்கொடுத்ததற்காக உமக்கு நன்றி. உம்முடைய வாக்குத்தத்தங்களில் நாங்கள் நடக்கவும், நீரே எங்களைப் பராமரிக்கிறவர் என்று உம்மை நம்பவும், எங்கள் வாழ்வின் ஒவ்வொரு காலங்களிலும் உம்மை மகிமைப்படுத்தவும் எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் வெற்றிகள் உம்முடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவரட்டும், உம்முடைய கிருபையின் ஐசுவரியத்தை வெளிப்படுத்தட்டும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

தேவன் தமது வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்துகிறார்

ஆதியாகமம் 13:14-18

லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: 'நீ இருக்கிற இடத்திலிருந்து உன் கண்களை ஏறெடுத்து, வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தத் தேசம் முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்'.

- ஆதியாகமம் 13:14,15

இறுதியில், லோத்து பிரிந்து சென்றபோது, **தேவன் மீண்டும் பேசினார்.** எகிப்தில் ஆபிராம் செய்த சமரசத்தினால் ஏற்பட்ட மௌனம், தெய்வீக உறுதியினால் உடைக்கப் பட்டது. சில நேரங்களில், **முழுமையான கீழ்ப்படிதலுக்குத் தடையாக இருக்கும் உறவுகள், பழக்கவழக்கங்கள் அல்லது பிணைப்புகளை நாம் கைவிடும் போது, தேவனுடைய சத்தம் இன்னும் தெளிவாகக் கேட்கிறது** (2 கொரிந்தியர் 6:17-18). ஆபிராம் இப்போது தேவனுடைய குரலை மீண்டும் தெளிவாகக் கேட்டான்.

நீங்கள் எத்தகைய உறவுகள், பழக்கவழக்கங்கள் அல்லது பிணைப்புகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

தேவன் ஆபிராமிடம், "**இப்பொழுது உன் கண்களை ஏறெடுத்து ... பார்**" என்றார். முன்னதாக, லோத்து சோதோமை நோக்கித் தன் கண்களை ஏறெடுத்து, **உலகப் பிரகாரமான வாய்ப்புகளைக் கண்டான்.** இப்போது ஆபிராம் பரலோகத்தை நோக்கித் தன் கண்களை ஏறெடுத்து, **தெய்வீக வாக்குத்தத்தத்தைக்** கண்டான். எவ்வளவு பெரிய முரண்பாடு! **ஒருவன் மாம்ச கண்ணால் பார்த்தான், மற்றவனோ விசுவாசத்தால் பார்த்தான்.**

தேவனின் உடன்படிக்கை மிகவும் **தெளிவானது மற்றும் திட்டவட்டமானது.** அவர் வாக்களித்த அந்த தேசத்திற்கு சரியான எல்லைகளும், திசைகளும், நிரந்தரத்தன்மையும் இருந்தன. தேவன் தெளிவற்ற கனவுகளையோ அல்லது வெறும் அடையாளமான நம்பிக்கைகளையோ தருவதில்லை; அவர் நிஜமான காரியங்களையே கையாளுகிறார் என்பதை மெக்கீ நமக்கு நினைவூட்டுகிறார். **ஆபிராம் தன் கால்களால் நின்ற பூமி எப்படி நிஜமானதோ, அதே அளவுக்கு பரலோகமும் நிஜமானது.** தேவனின் வாக்குத்தத்தங்கள் **உறுதியானவை, நம்பகமானவை, மற்றும் நித்தியமானவை.**

பரலோகம் ஓர் உண்மையான இடமா?



"நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எவ்வளவோ, அவ்வளவும் அதை நடந்து சுற்றிப்பார்; உனக்கு அதைத் தருவேன் என்றார்" (ஆதியாகமம் 13:17).

விசுவாசம் என்பது வெறுமனே காண்பது மட்டுமல்ல, அது நடப்பதுமாகும். தேவன் ஆபிராமை அந்தத் தேசத்தை ஆராய்ந்து பார்க்கவும், **அவருடைய வாக்குத்தத்தத்திற்குள் அடி எடுத்து வைக்கவும்** அழைத்தார். ஆபிராம் எடுத்து வைத்த ஒவ்வொரு காலடியும் **ஒரு விசுவாசச் செயலாகும்.**

உண்மையான விசுவாசம் கிரியைகளுக்கு வழிவகுக்கும்; அந்தக் கிரியைகள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து செய்யப்படும் செயல்களாகும்.

> "தேவன் வெறும் தத்துவார்த்தமான காரியங்களைச் செய்வதில்லை; அவர் முற்றிலும் உண்மையான மற்றும் யதார்த்தமான காரியங்களையே செய்கிறார்."



"அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய், எப்ரோனிலிருக்கும் மம்ரேயின் சமபூமியிலே குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்" (ஆதியாகமம் **13:18**).

ஆபிராம் **எப்ரோனிலுள்ள மம்ரேக்குக்** குடிபெயர்ந்தான். எப்ரோன் மற்றும் மம்ரே என்பதற்கு **'ஐக்கியம்', 'ஐசுவரியம்'** என்று பொருள். அங்கே அவர் **மற்றொரு பலிபீடத்தையும் கட்டினான்.** ஆபிராம் எங்கே சென்றார் என்பதை யாவரும் எளிதில் கூறிவிட முடியும், ஏனென்றால் அவர் சென்ற இடமெல்லாம் **ஒரு விசுவாசத்தின் சாட்சியை விட்டுச் சென்றார்.**

மனிதன் சந்திரனில் தன் காலடிகளையும் கொடிகளையும் விட்டுச் சென்றிருக்கிறான், ஆனால் **ஆபிராமோ பூமியில் பலிபீடங்களை விட்டுச் சென்றார்** என்று மெக்கீ குறிப்பிடுகிறார். இரண்டிற்கும் இடையேயான வித்தியாசம் ஆழமானது. ஆபிராமின் ஐசுவரியம் ஆவிக்குரியது, **அது தேவனோடு அவர் கொண்டிருந்த ஐக்கியத்தின் ஐசுவரியம்.**



சிந்தித்தல்

கேள்வி 1

தேவனோடு நீங்கள் நாள்தோறும் கொள்ளும் ஐக்கியத்திற்கு இந்த உலகத்தில் உள்ள ஏதேனும் ஒரு காரியம் தடையாயிருக்கிறதா?

கேள்வி 2

உங்கள் விசுவாசம் செயலற்றதாக இருக்கிறதா, அல்லது அது கிரியைகளை விளைவிக்கிறதா? (யாக்கோபு 2:20-26)

செயல்படுத்துதல்

கேள்வி 3

வரும் தலைமுறைக்கு நீங்கள் எவ்விதமான சாட்சியை வைத்துச் செல்லப் போகிறீர்கள்? சுய ஆசையின் சுவடுகளையா, அல்லது ஆராதனையின் பலிபீடங்களையா?

உங்கள் பிரச்சனைகளைப் பார்ப்பதை விட்டுவிட்டு, “உங்கள் கண்களை ஏறெடுத்து” தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பார்க்க நேரத்தை ஒதுக்குங்கள். கீழ்ப்படிதலோடு விசுவாசத்தினாலே நடந்து, தேவன் ஏற்கனவே உங்களுக்குச் செய்யச் சொன்ன காரியத்தின்படி செயல்படுங்கள்.

இன்றே ஒரு ஆவிக்குரிய பலிபீடத்தைக் கட்டுங்கள். உங்கள் வாழ்வில் தேவனுடைய உண்மைத்தன்மைக்குச் சாட்சியாக விளங்கும் காலங்களையும் இடங்களையும் குறித்துவைக்க ஒரு குறிப்பேட்டை உருவாக்குங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

சோதோம் மற்றும் கொமோரா

ஆதியாகமம் 14:1-24



ஆதியாகமம் 14-ஆம் அதிகாரம், வேதத்தில் **பதிவு செய்யப்பட்டுள்ள முதல் யுத்தத்தை** அறிமுகப் படுத்துகிறது. **இது ஆபிராமின் கதையில் ஓர் இடையூறு போலத் தோன்றினாலும், உலகப் பிரகாரமான மோதலுக்கும் ஆவிக்குரிய அழைப்பிற்கும்** இடையிலான தொடர்பைக் காட்டும் முக்கியமான அதிகாரமாக இது அமைகிறது.



ஒரு காலத்தில் **விமர்சகர்கள் இந்த நிகழ்வின் உண்மைத்தன்மையை சந்தேகித்தனர்**, ஆனால் தொல்பொருள் ஆய்வு இந்த ராஜாக்கள் இருந்ததை உறுதிப்படுத்தியுள்ளது. **அம்ராபெல் என்பவர் 'ஹம்முராபி' என்று அடையாளம்** காணப்பட்டுள்ளார், இது காலத்திற்கும் சந்தேகத்திற்கும் எதிராக **தேவனுடைய வார்த்தை உண்மையானது என்பதை மீண்டும் நிரூபிக்கிறது.**



இந்த யுத்தங்களின்போது **லோத்து சிறைபிடிக்கப் பட்டார்**. ஒரு காலத்தில் செழிப்பிற்காக **சோதோமைத் தேர்ந்தெடுத்த** மனுஷன், அதன் வீழ்ச்சியின்போது ஒரு கைதியாகக் கொண்டு செல்லப்பட்டான். **ஆறுதலைத் தருவதாக வாக்களித்த அந்த நகரம், சிறையிருப்பையே அவனுக்குக் கொடுத்தது.**

நீங்கள் உலகத்திற்கு மிக நெருக்கமாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?

எச்சரிக்கையாக இல்லையெனில் அதன் அழிவில் நீங்களும் சிக்கிக்கொள்ள நேரிடும்.

"ஒரு விதத்தில், இது ஆதியாகமப் புத்தகத்திலேயே மிகவும் குறிப்பிடத்தக்க மற்றும் முக்கியமான அதிகாரங்களில் ஒன்றாகும்."

"தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்தவர்களும் பழக்கப்பட்டவர்களுமான முந்நூற்றுப் பதினெட்டுப் பேரை ஆயுதபாணிகளாக்கி, தாண்மட்டும் அவர்களைத் தொடர்ந்துபோனான்" (ஆதியாகமம் 14:14).

லோத்து சிறைபிடிக்கப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, **விசுவாசம் அவரைச் செயல்படத் தூண்டியது.** அவர் தன்னிடம் பயிற்சி பெற்ற வேலைக்காரர் களைத் திரட்டிக்கொண்டு, படையெடுத்து வந்த ராஜாக்களை வடக்கு திசையில் தமஸ்கு வரை துரத்திச் சென்றார். எண்ணிக்கையில் இவர்கள் மிகக் குறைவாக இருந்தபோதிலும், **யுத்தம் கர்த்தருடையது** என்று ஆபிராம் நம்பினார். தந்திரமான முறையிலும் அதேநேரத்தில் தைரியத்தினாலும் அவர் எதிரிகளை வென்று, **லோத்துவையும், மற்றக் கைதிகளையும், அவர்களுடைய எல்லாப் பொருட்களையும் மீட்டெடுத்தார்.**

ஆபிராம் ஏன் லோத்தை மீட்கச் சென்றார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?



“அப்பொழுது உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜா மெல்கிசேதேக் அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து...” (ஆதியாகமம் 14:18-19).

மெல்கிசேதேக்கின் வம்சவரலாறு அல்லது பின்னணி ஏதுமின்றி வேதாகமத்தில் திடீரென்று தோன்றுகிறார். அவர் “உன்னதமான தேவனை” ஆராதிக்கும் ஒரு ராஜாவாகவும் ஆசாரியனாகவும் இருக்கிறார்.

அவருடைய கதாபாத்திரம் இயேசுவுக்கு ஒரு நிழலாட்டமாக இருக்கிறது: ஆரம்பமும் முடிவுமில்லாத ஒரு நித்திய ஆசாரியர் மற்றும் ராஜா (சங்கீதம் 110:4; எபிரெயர் 7). அவர் கொடுத்த அப்பமும் திராட்சரசமும் கிறிஸ்துவின் தியாகத்தையும், கர்த்தருடைய பந்தியின் ஐக்கியத்தையும் முன்னறிவிக்கிறது.

ஆபிராம் தான் கைப்பற்றிய அனைத்திலும் மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் கொடுத்தான். இந்தச் செயல், தனது வெற்றி தனது சொந்த பலத்தினால் வரவில்லை, தேவனிடமிருந்தே வந்தது என்பதைப் பகிரங்கமாக அறிவித்தது.



மெல்கிசேதேக் ஏன் இந்த இடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

முந்தைய அதிகாரத்தில், ஆபிராம் தவறான முடிவுகளை எடுத்ததைக் கண்டோம். இங்கேயும் மீண்டும் ஆபிரகாமுக்கு முன்பாக ஒரு வாய்ப்பு வருகிறது. தேவனோடு மீண்டும் ஐக்கியம் கொண்டது அவரை மாற்றியிருக்கிறதா?

சோதோம் ராஜா ஆபிராமுக்கு ஐசுவரியத்தையும் வெகுமதியையும் வழங்க முன்வந்தான். அக்காலத்துச் சட்டங்களின்படி, போரில் கிடைத்த கொள்ளைப் பொருட்களில் ஆபிராமுக்கு உரிமை இருந்தது, இருப்பினும் அவர் அதை மறுத்தார். மெல்கிசேதேக்கின் ஆசீர்வாதத்தின் மூலம் **தேவன் ஏற்கனவே ஆபிராமை இந்தச் சோதனைக்காக ஆயத்தப்படுத்தியிருந்தார்.** ஆராதனையினால் பலப்படுத்தப் பட்ட ஆபிராம், உலக லாபங்கள் தேவனுடைய மகிமையைத் திருடிக்கொள்ள அனுமதிக்கிறதில்லை.

வானத்திற்கும் பூமிக்கும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய ஏல் ஏலியோன் மீதான தனது விசுவாசத்தை அவர் அறிவித்தார். “நான் ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன்” என்று எந்த மனுஷனும் பெருமை பாராட்டுவதை அவர் விரும்பவில்லை. **ஒவ்வொரு வெற்றியும் தேவனுடைய கரத்தை மட்டுமே** சுட்டிக்காட்ட **வேண்டும்** என்று அவர் **விரும்பினார்**.



சிந்தித்தல்

கேள்வி 1

சோதோமிடமிருந்து ஐசுவரியத்தைப் பெற்றுக்கொள்ள ஆபிராம் மறுத்த செயல், தேவனே ஆசீர்வாதத்தின் உண்மையான ஊற்றாயிருக்கிறார் என்பதை அவர் நம்பினார் என்பதை எப்படி வெளிப்படுத்துகிறது?

கேள்வி 2

தேவனுக்காக நீங்கள் கொடுக்கும் சாட்சியை சமரசம் செய்யக்கூடிய நுட்பமான சோதனைகளை நீங்கள் எப்படி அடையாளம் கண்டு அதை எதிர்க்கிறீர்கள்?

செயல்படுத்துதல்

கேள்வி 3

ஒரு முக்கிய முடிவை எடுப்பதற்கு முன்பு, உங்கள் இருதயத்தைச் சோதித்துப் பார்த்து, உங்கள் நோக்கங்களை தேவனிடம் ஒப்புக்கொடுங்கள். உங்கள் நோக்கம் சுய லாபத்திற்காக இருந்து, தேவனை மகிமைப்படுத்துவதாக இல்லையென்றால், அந்த முடிவை மீண்டும் பரிசீலனை செய்து, அவரை மகிமைப்படுத்த முன்கூட்டியே தீர்மானியுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை
ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“ஆபிராம் தேவனை முழுமையாக விசுவாசித்தார். தேவன் சொன்னதை அவர் அப்படியே ஏற்றுக்கொண்டார், அவர் தேவனை நம்பினார். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கான வழியும் இதுதான்: தேவன் உங்களுக்காக ஏதோ ஒன்றைச் செய்திருக்கிறார் என்றும், கிறிஸ்து உங்களுக்காக மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்றும் விசுவாசிப்பதே அது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதன் மூலம் தேவன் உங்களை நீதிமான் என்று அறிவிப்பார்.”


ஆபிராமுடன் தேவன்
செய்த உடன்படிக்கை
ஆதியாகமம் 15

ஆபிராமுடன் தேவன் செய்த உடன்படிக்கை

அன்புள்ள பரலோக பிதாவே,

என் உள்ளத்தில் பயமோ சந்தேகமோ நிறையும்போது, "நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்ற உமது வாக்குத்தத்தத்தை எனக்கு நினைவூட்டியருளும். நீர் ஒருபோதும் என்னைக் கைவிடமாட்டீர் என்பதை அறிந்து, நான் உம்மை முழுமையாக நம்பவும் உமது அன்பில் இளைப்பாறவும் எனக்கு உதவுவீராக.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

ஆபிரகாமின் விசுவாசம்

ஆதியாகமம் 15:1-6

நானே உன் கேடகம்

"பயப்படாதே, ஆபிராமே; நான் உனக்குக் கேடகமும், உன் மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்."

ஆதியாகமம் 15:1

லோத்தை ஆபிராம் தைரியமாகப்போரிட்டு மீட்டெடுத்த பிறகும், **சோதோம் ராஜாவின் வெகுமதிகளை வாங்க மறுத்த பிறகும், தேவன் மீண்டும் ஒருமுறை இரவில் அவனுக்குத் தரிசனமானார்**. தேவன் ஆபிராமை ஊர் என்ற தேசத்திலிருந்து வெளியேறும்படி அழைத்த பிறகு அவர் ஆபிராமுக்குத் தம்மை வெளிப்படுத்துவது இது நான்காவது முறையாகும். இப்போது அவர் **தமது உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தை மீண்டும் அவனுக்கு உறுதிப்படுத்துகிறார்**.

நிசப்தத்தை உடைத்து, "பயப்படாதே, ஆபிராமே" என்ற கர்த்தருடைய சத்தம் கேட்டது. இதன் மூலம் **தேவன் தமது ஊழியக்காரனுக்கு ஆறுதலையும் உறுதியையும்** அளிக்கிறார். ஒருவேளை ஆபிராம் பழிவாங்கப்படுவோம் என்ற பயத்தையோ அல்லது நாளைய தினத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மையையோ உணர்ந்திருக்கலாம். எனவேதான் தேவன், "நானே உனக்குக் கேடகமாயிருக்கிறேன்" என்று பதிலளிக்கிறார். **அவர் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் பாதுகாக்கிறார்**.

கீழ்ப்படிதலின் கிரயத்தைக் குறித்து நீங்கள் எப்போதாவது பயந்ததுண்டா?

விசுவாசம் சில நேரங்களில் ஆபத்துகளின் வழியே நடத்தக்கூடும் என்பதை ஆபிராம் கற்றுக்கொள்கிறார். ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படிந்து செய்யப்படும் ஒவ்வொரு தியாகத்திற்கும் ஈடாக அவருடைய பிரசன்னம் நமக்குக் கிடைக்கிறது.

சோதோம் ராஜாவினால் வழங்கப்பட்ட உலகப்பிரகாரமான செல்வங்களை நிராகரித்த ஆபிராமுக்கு, தேவன், நான் "உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்று கூறி, இப்போது பரலோகத்தின் பங்காக தேவன் தம்மையே அருளினார்.

நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய மகா பெரிய பலன் எது?

இருப்பினும், நிறைவேறாத வாக்குத்தத்தத்தின் ஏக்கம் அவர் இருதயத்தில் எழுகிறது. "கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே" (வ.2) என்று கேட்கிறார். ஆபிராமின் ஜெபம் அலங்காரமான வார்த்தைகளைக் கொண்டதல்ல, அது உண்மையானது. அவர் வெறும் மதச்சடங்குகளைச் செய்கிற மனிதரல்ல, தேவனோடு நேர்மையாகப் பேசுகிறவர்; தேவனும் அவருக்குச் செவிகொடுக்கிறார்.



கர்த்தர் பொறுமையோடும் உறுதியோடும் பதிலளிக்கிறார்: “உன் கர்ப்பப்பிறப்பா யிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான்”. அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.

இங்கு **எல்லையற்றவையாயும் பிரகாசமானவையாயும் மனிதக் கணக்கீட்டுக்கு அப்பாற்பட்டவையாயும்** இருக்கிற வானங்களே ஆபிராமிற்கு கிருபையின் செய்தியாயின. இந்தப் பரந்துவிரிந்த வானத்தின் கீழ், **தேவனுடைய வாக்குத் தத்தம் தன் கண்கள் காண்பதை விடத் தொலைவானதும், தன் மனம் கற்பனை செய்வதை விட விரிவானதும் என்பதை ஆபிராமுக்கு நினைவூட்டியது.**

ஆபிராம் அன்று கண்ட நட்சத்திரக் கூட்டத்தில் நாமும் இருக்கிறோம். தேவன் அன்றே உங்களைப் பற்றியும் நினைத்திருந்தார் என்பது உங்களுக்கு எத்தகைய உணர்வைத் தருகிறது?

“உங்கள் இரட்சிப்பிற்காக நீங்கள் கிரியை செய்ய முடியுமானால், தேவன் உங்களுக்குக் கடனாளியாய் இருப்பார். ஆனால், என் நண்பரே, இரட்சிப்பிற்கு கிருபையினாலேயன்றி தேவன் ஒருபோதும் வேறு எந்த முறையையும் வைத்திருந்ததில்லை. நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால், தேவனை விசுவாசித்து, கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவன் உங்களுக்காக இரட்சிப்பை ஆயத்தம் செய்திருக்கிறார் என்று நம்புவதினால் மட்டுமே சாத்தியமாகும்.”




நட்சத்திரங்கள் நிறைந்த அந்த வானத்தின் கீழே நின்றுகொண்டு ஆபிராம் தேவனை விசுவாசித்தார். தேவன் பேசிவிட்டார், அதுவே அவருக்குப் போதுமானதாக இருந்தது. இந்த எளிய தருணத்தில்தான், ஒட்டுமொத்த மீட்பின் வரலாற்றிலேயே மிக உன்னதமான சத்தியங்களில் ஒன்றை வேதாகமம் பதிவு செய்கிறது:

“அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.”

ஆதியாகமம் 15:6





பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, விசுவாசிக்கிற யாவரும் எவ்வாறு விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள் என்பதை விளக்குவதற்கு, அப்போஸ்தலனாகிய பவுல் இந்தத் தருணத்தையே சுட்டிக்காட்டுகிறார்: "ஒருவன் கிரியைசெய்யாமல், பாவியை நீதிமானாக்குகிறவரை விசுவாசிக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்." (ரோமர் 4:5). ஆபிராமின் இந்த விசுவாசமானது, அவருக்குப் பின்பு வரும் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைகிறது.



உங்கள் விசுவாசம் எதன்மீது கட்டப்பட்டிருக்கிறது?

நீங்கள் தவறாக எவற்றின்மீது உங்கள் விசுவாசத்தை வைத்திருக்கிறீர்களோ, அந்தக் காரியங்களை எழுதி வையுங்கள். அதற்குப் பதிலாக, நீங்கள் எதன்மீது உங்கள் விசுவாசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்?

ஆபிராமுடன் தேவன் செய்த உடன்படிக்கை

ஆதியாகமம் 15:7-21




"கர்த்தராகிய ஆண்டவரே, நான் இதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன்?" என்று ஆபிராம் கேட்டபோது, தேவன் அவனைக் கடிந்துகொள்ளாமல், அவனுக்கு உறுதியான பதிலை அளிக்கிறார். தமது வாக்குத்தத்தத்தை ஆவிக்குரிய வகையிலும், சட்டபூர்வமாகவும் உறுதியாக்கும்படி ஒரு உடன்படிக்கைக்குள் பிரவேசிக்க ஆபிராமை தேவன் அழைக்கிறார்.

ஆபிராம் மிருகங்களைக் கொண்டுவந்து, பலிக்காக ஆயத்தப்படுத்தி காத்திருக்கிறார். சூரியன் அஸ்தமிக்கிற நேரத்தில், கழுகுகள் அந்த மாம்சத்துண்டுகளின்மேல் இறங்குகின்றன; ஆபிராம் அவைகளைத் துரத்திவிடுகிறார். தேவன் செயல்படும்வரை நாம் காத்திருக்கும் போது, காட்டவேண்டிய விடாமுயற்சியின் ஒரு அழகிய சித்தரிப்பாக இது அமைகிறது.

இருள் சூழ்ந்தபோது, **ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வருகிறது**. அந்த அமைதியான நேரத்தில், தேவன் எதிர்காலத்தை அவனுக்கு வெளிப்படுத்துகிறார்: ஆபிராமின் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருப்பார்கள்; அங்கே நானூறு வருஷங்கள் அடிமைத்தனத்தில் இருப்பார்கள்; அதன் பின்பு மிகுந்த பொருள்களுடனே திரும்பி வருவார்கள்.

மேலும், எமோரியர்கள் நியாயத்தீர்ப்பை அடைவதற்கு முன்பாக, அவர்கள் மனந்திரும்புவதற்குக் கால அவகாசம் கொடுத்து, அவர்கள்மீது தேவன் தமது பொறுமையையும் இரக்கத்தையும் காட்டுவதையும் இது வெளிப்படுத்துகிறது.





புகைகிற சூளையும், எரிகிற தீப்பந்தமும் தோன்றின. இவை கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கின்றன. சூளையானது நியாயத்தீர்ப்பையும், தீப்பந்தமானது அவர் உலகத்தின் ஒளியாக இருப்பதையும் குறிக்கின்றன. அவைகள் பலியிடப்பட்ட அந்த மாம்சத்துண்டுகளின் நடுவாகக் கடந்துசென்றன. ஆபிராம் அவைகளின் நடுவாக நடந்து செல்லவில்லை, **தேவன் மட்டுமே நடந்து சென்றார்**.

இந்த உடன்படிக்கை மனிதனுடைய சுயமுயற்சியைச் சார்ந்திருக்கவில்லை, இது முழுமையாக தேவனுடைய உண்மைத்தன்மையையே சார்ந்திருக்கிறது. இதில் **ஆபிராமின் பங்கு ஏதுமில்லை; தேவனே எல்லாவற்றையும் பொறுப்பேற்றுக்கொள்கிறார்**.

தேவன் உங்களுக்கான உடன்படிக்கையைத் தாமே செய்துமுடிக்கும்போது, நீங்கள் உண்மையிலேயே அவருடைய கரத்தில் இளைப்பாறுவது என்றால் என்ன என்பதை எவ்வாறு சிந்திக்கிறீர்கள்?



உடன்படிக்கையின் இந்தக் காட்சியானது, தேவனுடைய கிருபையை அதன் மிகத் தூய்மையான வடிவில் வெளிப்படுத்துகிறது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, கிறிஸ்து தாமே நமக்காக சிலுவை என்னும் பலியின் ஊடாக நடந்து சென்று, தமது இரத்தத்தினாலே நித்திய இரட்சிப்பின் உடன்படிக்கையை முத்திரையிட்டார்.

அன்று இரவில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லைகள் குறிக்கப்பட்டன; ஒளியினாலும் அக்கினியினாலும் அந்த உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது. **தேவனுடைய வார்த்தையே போதுமானதாக இருந்தது. அவருடைய உடன்படிக்கை ஒருபோதும் முறிக்க முடியாதது.**



> “ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, எந்தவொரு ஒப்பந்தத்தையும் செய்வதற்கு நான் அங்கே இருக்கவில்லை. ஆனால் பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும் அங்கே இருந்தார்கள். குமாரன் சிலுவைக்குச் சென்று, என் பாவங்களுக்காக மரித்தார். நான் பாவத்தினால் செயலிழந்து கிடந்தேன். என்னால் தேவனுக்கு எந்த வாக்குத்தத்தத்தையும் கொடுக்க முடியவில்லை; உங்களாலும் முடியாது.”

சிந்தித்தல்

கேள்வி 1

தேவனுடைய உடன்படிக்கை கிறிஸ்துவின் மூலமாக ஏற்கனவே நிறைவேற்றப் பட்டுவிட்டது என்பதை அறிந்திருப்பதினால் உண்டாகும் சமாதானத்தில் நீங்கள் எவ்வாறு வாழமுடியும்?

கேள்வி 2

இன்றைய நாட்களில், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீதான உங்கள் நம்பிக்கையை இந்த வேதப்பகுதி எவ்வாறு பலப்படுத்துகிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

உங்கள் சுயபலத்தைச் சார்ந்திருக்காமல், தேவனுடைய கிருபையையே சார்ந்திருப்பதற்கு நீங்கள் எடுக்கப்போகும் தீர்மானங்களை எழுதி வையுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை
ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின்
மேற்கோள்



“ஆபிராம் என்ன செய்வதாக வாக்குறுதி அளித்தார்? ஒன்றுமேயில்லை. அவர் தேவனை விசுவாசித்தார். தேவன் உங்களுக்காகச் செய்துமுடித்த காரியங்களை நீங்களும் விசுவாசிப்பீர்களானால், அவர் உங்களையும் தமது கிருபையினாலே இரட்சிப்பார்.”


ஆபிராமின் விசுவாசம்
சோதிக்கப்படுதல்
ஆதியாகமம் 16

ஆபிராமின் விசுவாசம் சோதிக்கப்படுதல்

அன்புள்ள பரலோக பிதாவே,

ஆண்டவரே, உமது வேளைக்காகக் காத்திருக்கவும், காரியங்களை எங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளாமல் இருக்கவும் எங்களுக்கு கற்றுத்தாரும். நாங்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலைகளில், உமது வாக்குத்தத்தங்களை உறுதியாக நம்பி, உமது திட்டத்திற்காக கவலையில்லாமல் நிலைத்திருக்க எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் முடிவுகள் எங்கள் பொறுமையின்மையால் அல்ல, மாறாக விசுவாசத்தால் வழிநடத்தப்படட்டும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற குறுக்குவழிகள்

ஆதியாகமம் 16:1-4

"வேதாகமத்தில் ஒரு காரியம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் மட்டுமே, தேவன் அதை ஏற்றுக்கொள்கிறார் என்று நாம் நினைத்தால் அது தவறான புரிதலாகும். வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு துல்லியமாக எழுதப்பட்டது; ஆனால் தேவன் விரும்பாத, அங்கீகரிக்காத பல காரியங்களும் அவருடைய வார்த்தையில் பதிவு செய்யப்பட்டுள்ளன."

- டாக்டர் வெர்னோன் மெக்கீ



ஆபிராமின் கதையில் ஆகார் என்ற புதிய நபர் அறிமுகப்படுத்தப்படுவதோடு இந்த அதிகாரம் தொடங்குகிறது. ஆபிராம் எகிப்திலிருந்து இரண்டு காரியங்களைக் கொண்டுவந்தான் - ஒன்று செல்வம், மற்றொன்று எகிப்திய அடிமைப் பெண்ணான ஆகார். இவை இரண்டுமே ஆபிராமை பாவமான முடிவுகளுக்கு வழிநடத்தின.



கலாத்தியர் 4:21-25 இல், அப்போஸ்தலனாகிய பவுல் ஆகாரை ஓர் உருவகமாகப் பயன்படுத்துகிறார். ஆகாரும் அவளுடைய சந்ததியாரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் என்றும், சாராயும் அவளுடைய சந்ததியாரும் சுதந்திரமானவர்கள் மற்றும் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள் என்றும் அவர் கூறுகிறார்.

நீங்கள் எதோடு இணைக்கப்பட விரும்புகிறீர்கள், நியாயப்பிரமாணத்துடனா அல்லது கிறிஸ்துவுடனா?

சாராயின் வார்த்தைகள், காலதாமதமாவதால் உண்டாகிற நம்பிக்கையின் வலியை வெளிப்படுத்துகின்றன: "**நான் பிள்ளை பெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப் பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும்**" (ஆதியாகமம் 16:2).



அவளுடைய சிந்தனை மனித இயல்புக்கு உட்பட்டதாயிருந்தாலும் அது ஆவிக்குரியது அல்ல. தன்னுடைய விரக்தியால், அக்கால கலாச்சாரத்தில் வழக்கிலிருந்த ஒரு யோசனையை அவள் சொல்கிறாள். ஆனால் தேவன் அதை அங்கீகரிக்கவில்லை, அது தவறான வழி என்பதால் அதை அவர் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

ஆபிராம் சாராயின் வார்த்தைக்குச் செவிகொடுத்தான். அவன் விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்குப் பதிலாக, மனித யோசனைக்கு இடமளித்துவிட்டான். இங்கே வாக்குத்தத்தத்தின் குரல் புறக்கணிக்கப்பட்டு, பொறுமையின்மையினால் உண்டான சத்தம் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது.

தேவனுக்காகக் காத்திருக்கும்போது நீங்கள் எப்போதாவது பொறுமையிழந்து போயிருக்கிறீர்களா?

ஆகார் கர்ப்பவதியானமினிமித்தம் அவளுக்குள் பெருமை தலைதூக்கியது. ஆசீர்வாதத்தைப் பெற நினைத்த குறுக்குவழி, இப்போது பிளவுக்குக் காரணமாகி விட்டது. விசுவாசமில்லாமல் எடுத்த முடிவின் பலனை இப்போது இருவரும் சந்திக்க வேண்டியுள்ளது. இங்கே நடந்த உண்மையான தோல்வி தார்மீக ரீதியானது அல்ல, அது ஆவிக்குரிய தோல்வி. தேவனுடைய வல்லமையின்றி, தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாமே நிறைவேற்ற முயற்சிப்பதே அந்த விசுவாசமின்மை.

உங்கள் வாழ்க்கையில் தேவனுக்கு “உதவி செய்ய” நினைத்து, நீங்கள் எந்தெந்தப் பகுதிகளில் குறுக்குவழிகளைத் தேட சோதிக்கப்படுகிறீர்கள் என்பதை எழுதுங்கள். விசுவாசத்தோடு காத்திருக்க நீங்கள் எப்படி கற்றுக்கொள்ளலாம்?

சாராய்க்கும் ஆகாருக்கும் இடையிலான மோதல்

ஆதியாகமம் 16:5-16



அவர்களுக்கிடையேயான மோதல் முற்றியது. இப்போது கர்ப்பவதியாக இருக்கும் ஆகார், சாராயின் கடுமையான நடத்தையைத் தாங்க முடியாமல், பயந்து வனாந்தரத்திற்கு தனியே ஓடிப்போகிறாள்.

ஆயினும் அவள் ஓடிப்பபோன சமயத்தில்தானே தேவ கிருபை அவளைக் கண்டடைகிறது.



“கர்த்தருடைய தூதனானவர் அவளை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகே இருக்கிற நீரூற்றண்டையில் கண்டார்.” ஆதியாகமம் *16:7*

வேதாகமத்தில் முதன்முறையாக “கர்த்தருடைய தூதனானவர்” இங்கேதான் குறிப்பிடப்படுகிறார். இது மாம்சத்தில் வருவதற்கு முந்தைய கிறிஸ்துவின் வெளிப்பாடு என்று நம்பப்படுகிறது; அவர் அப்போதே தொலைந்து போனவர்களைத் தேடி வந்தார். ஆபிராமைச் சந்தித்த அதே மகிமையின் தேவன், இப்போது கலங்கி நிற்கும் ஓர் அடிமைப் பெண்ணைச் சந்திக்கிறார்.

நீங்கள் வனாந்தரம் போன்ற கடினமான சூழ்நிலைகளில் இருந்தாலும் கிறிஸ்து உங்களைக் காண்கிறார் என்று நம்புகிறீர்களா?

ஆகாரின் கதையைத் தொடர்ந்து படிக்கும்போது, தேவன் பாவத்தை நியாயப்படுத்த வில்லை என்றாலும், அவர் மன உருக்கமுள்ள தேவன் என்பதைக் காண்கிறோம். ஆகார் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவனுக்கு "இஸ்மவேல்" என்று பெயரிடப்படும் என்று முன்னறிவிக்கப்பட்டது. இஸ்மவேல் என்றால் "தேவன் கேட்கிறார்" என்று பொருள். தேவன் அவளுடைய வேதனையைக் கண்டார், அவளுடைய அழுகையைக் கேட்டார்.

> "ஆகாரிடம் தேவன் எவ்வளவு கிருபையாக நடந்துகொள்கிறார்! அது அவளுடைய பாவம் அல்ல என்பதால், அவர் அவளிடம் மிகவும் இரக்கத்தோடு செயல்படுகிறார்."

தேவன் தம்மைக் காண்கிறார் என்ற உண்மையை உணர்ந்து ஆகார் வியப்படைந்து, கர்த்தருக்கு ஒரு பெயரிடுகிறாள்.

"எல்-ரோயீ"

(אֵל רֳאִי)

"நீர்-என்னைக்-காண்கிற-தேவன்."

ஆதியாகமம் 16:13

வழிதவறிப் போகிறவர்களிடம் தேவன் எவ்வளவு கிருபையாக இருக்கிறார். அவர் புறக்கணிக்கப்பட்டவர்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதில்லை; சோர்ந்து போனவர்களை மறப்பதுமில்லை. பாலைவனத்தில் ஆகாரைத் தேடிவந்த அதே தேவன், நம் விசுவாசம் குறையும்போதும் நம்மைத் தேடி வருகிறார்.



சிந்தித்தல்

கேள்வி 1

கவனிக்கப்படாத மற்றும் மறக்கபட்டவர்கள் மீது தேவன் வைத்திருக்கும் மனஉருக்கத்தை ஆகார் தேவனைச் சந்தித்த இந்த நிகழ்வு எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

கேள்வி 2

தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாமே அவசரமாக நிறைவேற்ற நினைப்பதில் உள்ள ஆபத்துகளைக் குறித்து இப்பகுதி என்ன வெளிப்படுத்துகிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

உங்கள் வாழ்க்கையில் தேவன் உங்களை காண்கிறார் (எல்-ரோயீ) என்பதை நீங்கள் அனுபவித்த ஒரு தருணத்தைக் குறித்து ஏதாவது சாட்சியையோ அல்லது பாடலையோ உங்களால் பகிர்ந்துகொள்ள முடியுமா?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

ஆபிராமின் சோதனைகள்

ஆதியாகமம் 12 - 16

முன்னோக்கிச் செல்வதற்கு முன், ஆபிராமின் வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்பது நல்லது. கர்த்தரால் அவனது விசுவாசம் தொடர்ந்து சோதிக்கப்பட்டும், மெருகூட்டப் பட்டும் வந்த பல நிகழ்வுகளின் தொகுப்பே அவனது வாழ்க்கை பயணம்.



ஊர் பட்டணத்திலிருந்து அழைப்பு
தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, விசுவாசத்தோடு ஆபிராம் தன் சொந்த ஊரை விட்டுப் புறப்படுகிறான்.

கானான் தேசத்தில் பஞ்சம்
அவன் எகிப்துக்குச் செல்கிறான். அங்கு செல்வத்தையும் ஆகாரையும் பெறுகிறான்; இவை இரண்டுமே எதிர்காலத்தில் அவனுக்குத் தடைக்கல்லாக மாறுகின்றன.

ஐசுவரியத்தின் சோதனை
செல்வம் பெருகியதால் ஆபிராமுக்கும் லோத்துவுக்கும் இடையே பிரச்சினை உருவாகியது. ஆனால், ஆபிராம் பொருட்செல்வத்தைக் காட்டிலும் சமாதானத்தையே தேர்ந்தெடுத்து, பெருந்தன்மையோடு நடந்துகொள்கிறான்.

அதிகாரத்தின் சோதனை
ராஜாக்களுக்கு எதிரான வெற்றியைத் தொடர்ந்து, உலகப் பிரகாரமான வெகுமதியை மறுத்து, தேவனே தனக்கு எல்லாம் என்று அவரை மகிமைப்படுத்துகிறான்.

காத்திருக்கும் சோதனை
பத்து வருடங்களாகப் பிள்ளை இல்லாததால், பொறுமை இழந்து சமரசம் செய்து கொள்கிறான். இதன் விளைவாக இஸ்மவேல் பிறக்கிறான்.

இன்னும் வரப்போகும் சோதனைகள்

சிந்தித்தல்

கேள்வி 1

ஆபிராமின் சோதனைகளில் எது உங்களுடைய தற்போதைய விசுவாசப் பயணத்தை அதிகமாகப் பிரதிபலிக்கிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 2

தேவனுடனான உங்கள் வாழ்க்கைப் பயணத்தில், தோல்விகளும் பின்னடைவுகளும் எவ்வாறு முன்னேற்றத்திற்கான படிக்கட்டுகளாக மாறுகின்றன?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



"முடிவற்ற நித்திய தேவனை, ஒரு குறுகிய வரையறைக்குள் இருக்கிற எளிய மனிதனால் முழுமையாகப் புரிந்துகொள்வது கடினமான காரியம். அவரை அறிந்துகொள்வதிலும் புரிந்துகொள்வதிலும் நாம் அனைவருமே குறைவுள்ளவர்களே. நித்திய காலம் முழுவதும் நாம் செய்யப்போகும் ஒரு சிறந்த காரியம் என்னவென்றால், தேவனை இன்னும் அதிகமாக தொடர்ந்து அறிந்துகொண்டே இருப்பதுதான் என்று நான் நினைக்கிறேன். அது எந்த மனிதனும் எதைக் கற்றுக் கொள்வதைக் காட்டிலும் அவரைக் கற்றுக்கொள்வதே மதிப்புமிக்க ஒரு காரியம். தேவனை அறிந்துகொள்கிற காரியமானது, நித்தியம் முழுவதும் ஒரு மனிதனின் நிலையை மேன்மைப்படுத்துகிற ஒன்றாகும்."


உடன்படிக்கை
உறுதிப்படுத்தப்படுதல்
ஆதியாகமம் 17

உடன்படிக்கை உறுதிப்படுத்தப்படுதல்


அன்புள்ள பரலோக பிதாவே,

நீர் சர்வவல்லவர் என்பதையும், உமது ஒவ்வொரு வாக்குத்தத்தத்திலும் உண்மையுள்ளவர் என்பதையும் எனக்கு நினைவூட்டும். உமக்கு முன்பாகக் குற்றமற்றவனாய் நடக்கவும், சாத்தியமற்றதாகத் தோன்றுவதை விசுவாசிக்கவும், உமது நித்திய உடன்படிக்கையை முற்றிலுமாய் சார்ந்துகொள்ளவும் என் விசுவாசத்தைப் பலப்படுத்தும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

தேவன் ஆபிராமுக்கும் சாராய்க்கும் புதிய பெயர்களைச் சூட்டுதல்

ஆதியாகமம் 17:1-19



"தனக்கு குழந்தை எதுவும் பிறப்பதற்கு முன்னரே தந்தையாக இருந்த ஒரு மனிதர் இங்கே இருக்கிறார். ஆபிரகாம் தனக்குக் குழந்தை இல்லாத நேரத்திலேயே, விசுவாசத்தின் மூலமாக ஆபிரகாமாக அதாவது அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாக இருந்தார்."

- டாக்டர் வெர்னோன் மெக்கீ

பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன, இப்போது ஆபிராமுக்கு 99 வயது. கர்த்தர் மீண்டும் அவனுக்குத் தரிசனமானார். தேவன் தம்முடைய புதிய நாமத்தை வெளிப்படுத்துவதன் மூலம் மௌனத்தைக் கலைக்கிறார்: **எல்-ஷடாய்** அதாவது "**நான் சர்வவல்லமையுள்ள தேவன்**". இந்த பெயருக்கு "எல்லாவற்றிற்கும் போதுமானவர்" என்று அர்த்தம். தாம் வாக்களித்ததை நிறைவேற்றுவதற்கு முழுமையான அதிகாரமும் வல்லமையும் கொண்ட தேவன் அவர்.

எல்-ஷடாய் என்ற பெயரின் மூலம் தேவன் தம்மைக் குறித்து வெளிப்படுத்த விரும்புவது என்ன?

இது தேவன் ஆபிராமுக்குத் தரிசனமானதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஐந்தாவது நிகழ்வாகும். மேலும் இந்த அதிகாரத்தில் "உடன்படிக்கை" என்ற வார்த்தை பதின்மூன்று முறை வருகிறது. தேவன் தமது வாக்குத்தத்தத்தை மீண்டும் உறுதிப்படுத்தவும், இஸ்மவேல் சுதந்தரவாளி அல்ல என்பதைத் தெளிவுபடுத்தவும் வருகிறார். அவருடைய உடன்படிக்கை மனித முயற்சியின் அடிப்படையில் அல்ல, தெய்வீக வல்லமையின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது.

> "இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல்,
> நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத்
> தகப்பனாக ஏற்படுத்தினபடியால்,
> உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்."
>
> ஆதியாகமம் 17:5

ஆபிராம் என்பதற்கு "உயர்த்தப்பட்ட தகப்பன்" என்று பொருள். ஆனால் ஆபிரகாம் என்பதற்கு "திரளான மக்களின் தகப்பன்" என்று பொருள். வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு முன்னரே தேவன் அவனுடைய பெயரை மாற்றுகிறார். அதாவது விசுவாசத்தினால், ஆபிரகாம் தன் கண்களால் காண்பதை வைத்து அல்ல, தேவன் தன்னை எப்படி அழைக்கிறாரோ அதன்படி வாழ வேண்டும்.

எதையாவது கண்ணால் காண்பதற்கு முன்பே அதை விசுவாசிக்கும்படி நீங்கள் எப்போதாவது அழைக்கப்பட்டிருக்கிறீர்களா?

அந்த காட்சியைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்: ஆபிரகாமின் கூடாரத்தைக் கடந்து செல்லும் பயணிகள் அவரிடம், "உங்கள் பெயர் என்ன?" என்று கேட்கிறார்கள். சாராள் மூலம் அவனுக்கு ஒரு பிள்ளைகூட இல்லாத நிலையில், "திரளான மக்களின் தகப்பன்" என்று அவன் பதிலளிக்கும்போது அவர்கள் சிரிக்கிறார்கள். ஆனாலும் ஆபிரகாம் தொடர்ந்து விசுவாசிக்கிறான். ஈசாக்கு பிறப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே அவன் விசுவாசத்தினால் ஒரு தகப்பனாகிவிடுகிறான்.

விசுவாசம் என்பது இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைப்பதாகும்.

> தேவன் இந்த மக்களோடு செய்த உடன்படிக்கை ஒரு நித்திய உடன் படிக்கையாகும். அது நித்தியமானதாக இருப்பதால், அது எளிதில் முறிக்கப்படக்கூடியதோ அல்லது முடிந்துபோகக்கூடியதோ அல்ல. தேவன் அவர்களுக்கு அந்தத் தேசத்தை தொண்ணூற்றொன்பது வருட குத்தகைக்குக் கொடுக்கவில்லை. தேவன் அவர்களுக்கு அதை நித்திய சுதந்தரமாகக் கொடுத்தார்.



6 முதல் 9 வரையிலான வசனங்களில், தேவனுடைய வாக்குத்தத்தம் விரிவாக வெளிப்படுகிறது. இது ஒரு தற்காலிக ஏற்பாடு அல்ல. இந்த உடன்படிக்கை **நித்தியமானது** என்று தேவன் கூறுகிறார். இந்த வார்த்தை அவருடைய வாக்குறுதியில் மீண்டும் மீண்டும் வருகிறது.

இந்த உடன்படிக்கை ஆபிரகாமின் பரிபூரணத்தைச் சார்ந்ததல்ல, மாறாக தேவனுடைய வாக்குத்தத்தத்தையே சார்ந்துள்ளது. அதாவது இது முழுமையாக "**நானே செய்வேன்**" என்ற தேவனுடைய உறுதி மொழியை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இறுதியாக, உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனம் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

"**எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்**" (ஆதியாகமம் 17:10)

இந்தச் சரீரப்பிரகாரமான செயல், ஆவிக்குரிய ரீதியில் பிரித்தெடுக்கப்பட்டு தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதை அடையாளப்படுத்துகிறது. விருத்தசேதனம் என்பது உடன்படிக்கையின் அடையாளமாக இருந்ததே தவிர, அதன் அடிப்படையாக இல்லை. உடன்படிக்கையைப் பெறுவதற்காக அவர்கள் இதைச் செய்ய வேண்டியதில்லை; தேவன் ஏற்கனவே அவர்களோடு உடன்படிக்கை செய்துவிட்டார்.

அதேபோல, இன்றைய விசுவாசிகளுக்கும் நற்கிரியைகள் இரட்சிப்பைப் பெற்றுத்தருவதில்லை; மாறாக, நாம் தேவனைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு அவை சாட்சியாக இருக்கின்றன. அவருடைய பிள்ளைகளாக ஆவதற்காக நாம் நற்கிரியைகளைச் செய்வதில்லை. நாம் அவருடைய பிள்ளைகளாக இருப்பதாலேயே கீழ்ப்படிகிறோம்.

நீங்கள் இருதயத்தில் 'விருத்தசேதனம்' செய்யப்பட்டிருக்கிறீர்களா?

புதிய பெயர்கள்

தேவன் (வெளிப்பாடு)

எல்-ஷடாய்

אֵל שַׁדַּי

நான் சர்வவல்லமையுள்ள தேவன்

ஆபிராம்	▶	ஆபிரகாம்
[தகப்பன்]		[திரளான மக்களின் தகப்பன்]
אַב		אַב־הֲמוֹן

சாராய்	▶	சாராள்
[என் இளவரசி]		[இளவரசி]
שָׂרָי		שָׂרָה



"**பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும். நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்.**" (ஆதி. 17:15-16)

அவளுடைய பெயரும் மாறுகிறது. "**என் இளவரசி**" என்பதிலிருந்து ஜாதிகளின் தாயான "**இளவரசி**" என மாறுகிறது. ஆபிரகாமின் பதில் அழகானது:

"அப்பொழுது **ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து**..." (ஆதியாகமம் 17:17)

இந்த சிரிப்பு அவிசுவாசத்தினால் வந்தது அல்ல, இது ஓர் ஆச்சரியத்தின் சிரிப்பு. முற்றிலும் சாத்தியமற்ற ஒரு காரியத்தை எண்ணி அவன் மகிழ்கிறான். தேவன் நினைத்துப்பார்க்க முடியாததைச் செய்யப்போகிறார் என்பதை எண்ணி வந்த ஆனந்தக் கண்ணீரோடு கூடிய சிரிப்பு இது.

ஆனால் மகிழ்ச்சி எழும்போது, ஒரு வலியும் எழுகிறது. ஆபிரகாமுக்கு இஸ்மவேல் நினைவுக்கு வருகிறான். "**இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக!** என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினான்" (ஆதியாகமம் 17:18).

இது ஒரு தகப்பனின் இருதயத்திலிருந்து வந்த கெஞ்சல். ஆபிரகாம் தன் மகனை நேசிக்கிறான், ஆனால் தேவனுடைய திட்டமோ சர்வ அதிகாரமுடையது.

இஸ்மவேலை வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளியாக தேவன் ஏற்றுக்கொள்ள வில்லை. அவருடைய உடன்படிக்கை, விசுவாசத்தின் மற்றும் அற்புதத்தின் பிள்ளையான ஈசாக்கின் மூலமாகவே வரும். தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்போது, எந்த மனிதத் திட்டமும் அதற்கு ஈடாக முடியாது.

உங்கள் திட்டங்களை தேவனுடைய திட்டங்களாக மாற்ற எப்போதாவது நீங்கள் முயற்சித்திருக்கிறீர்களா?

நிறைவேறுவதற்கு முன்னரே விசுவாசிப்பது

நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்.
ஆதியாகமம் 17:4



சிந்தித்தல்

கேள்வி 1

உள்ளான விசுவாசத்திற்கும் வெளிப்படையான செயல்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றி, உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனம் நமக்கு என்ன கற்பிக்கிறது?

கேள்வி 2

சாத்தியமற்றவற்றின் மீதான விசுவாசத்தோடு பெரும்பாலும் மகிழ்ச்சியும் இணைந்தே வருகிறது என்பதை ஆபிரகாமின் சிரிப்பு உங்களுக்கு எவ்வாறு நினைவூட்டுகிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

தேவனோடு பேரம் பேசுவதை நிறுத்திவிட்டு, அவர் “நான் செய்வேன்” என்று கொடுத்த வாக்குத்தத்தத்தை முழுமையாக நம்ப வேண்டிய உங்கள் வாழ்க்கையின் பகுதி எது?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

இஸ்மவேலின் சுதந்தரம்

ஆதியாகமம் 17:20-27

> தேவன் தாம் கொடுத்த வாக்குத்தத்தத்தில் உறுதியாக இருக்கிறார். இதிலிருந்து தேவன் எந்த வகையிலும் பின்வாங்கவோ அல்லது தாமதிக்கவோ போவதில்லை. தாம் என்ன சொல்கிறாரோ அதை அப்படியே அவர் செய்யப் போகிறார். ஈசாக்கு ஏற்கனவே பிறந்து அவர்கள் மத்தியில் இருப்பது போலவே தேவன் பேசுகிறார். அது (ஈசாக்கு பிறப்பது) அடுத்த வருடம் நடக்கப் போகிறது, ஆனால் இப்பொழுதே அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போலப் பேசுகிறார்.

இஸ்மவேலின் மீது ஆபிரகாம் வைத்திருந்த அன்பை தேவன் புறக்கணிக்கவில்லை. அவருடைய இரக்கத்தினால், உடன்படிக்கையை அல்ல, ஆனால் ஆசீர்வாதத்தை வாக்களிக்கிறார். இஸ்மவேல் பலுகிப்பெருகுவான், பன்னிரண்டு பிரபுக்களுக்கும் ஒரு பெரிய ஜாதிக்கும் தகப்பனாவான். ஆனால் உடன்படிக்கையோ ஈசாக்கின் மூலமாகவே தொடரும்.

தேவன் இஸ்மவேலை ஆசீர்வதிக்க வேண்டிய கட்டாயம் இருந்ததா? அவருடைய செயல்கள் நமக்கு என்ன கற்பிக்கின்றன?

"சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்றார்" (ஆதியாகமம் 17:21).

தேவனுடைய சித்தம் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. ஆபிரகாம் இனி கெஞ்சத் தேவையில்லை. சில நேரங்களில் தேவனுடைய பதில் உறுதியானதாக இருக்கும், அப்போது கீழ்ப்படிதல் ஒன்றே சரியான விசுவாசத்தின் பதிலாக இருக்கும். ஆபிரகாம் உடனடியாகக் கீழ்ப்படிகிறான்.



"அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே பிறந்த யாவரையும், தான் பணத்திற்குக் கொண்ட அனைவருமாகிய தன் வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் சேர்த்து. தேவன் தனக்குச் சொன்னபடி, அவர்கள் நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலேதானே விருத்தசேதனம் பண்ணினான்." ஆதியாகமம் 17:23

தேவன் உடன்படிக்கையை வெளிப்படுத்திய பிறகு, ஆபிரகாம் உடனடியாகக் கீழ்ப்படிகிறான். இஸ்மவேல் அந்த உடன்படிக்கைக்கு உட்பட்டவன் அல்ல என்றாலும், அவன் ஆபிரகாமின் வீட்டைச் சேர்ந்தவன் என்பதால் அவனும் அந்த கீழ்ப்படிதலின் செயலில் சேர்க்கப்படுகிறான்.

முடிவுகள் கண்ணுக்குத் தெரிவதற்கு முன்பே, தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீதான விசுவாசத்தின் அடையாளமாக நீங்கள் எடுக்கக்கூடிய ஒரு கீழ்ப்படிதலின் செயல் என்ன?


சிந்தித்தலும் செயல்படுத்துதலும்

கேள்வி 1

உங்களோடு செய்த உடன்படிக்கையை உறுதிப்படுத்த தேவன் உங்களுக்கு ஒரு புதிய பெயரைக் கொடுக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அந்த பெயர் என்னவாக இருக்கும்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

வரைபட காட்சிச் சுருக்கம்



நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



"தேவன் ஆபிரகாமுடன் எந்தவிதமான உடன்படிக்கை பண்ணினார்? அது ஒரு நித்திய உடன்படிக்கை. அது நித்தியமானதானால், இன்றைக்கும் அது நன்மை தரக்கூடியதா? ஆம், நிச்சயமாய் நன்மை தரக்கூடியதுதான். நாம் கிறிஸ்துவை விசுவாசித்தால், உங்களுக்கும் எனக்கும் நித்திய ஜீவனைத் தருவதாக தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்; ஆம், இதுவே தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை."

THRU the BIBLE

எங்களுடைய வேதாகமம் சார்ந்த வளங்களை
செயலிகளின் வாயிலாக படிப்பதற்கு
கீழ்க்காணும் QR Code Scan செய்யுங்கள்

THRU the BIBLE
செயலி மூலம், 200க்கும் மேற்பட்ட
மொழிகளில் கிடைக்கும்
ஒலி வடிவ வேதாகம போதனைகளைப்
பதிவிறக்கம் செய்து கேட்டுப்
பயனடையுங்கள்.

Visit ttb.bible

எங்கள் வலைத்தளத்தில் “வேதாகம
தோழன் புத்தகத் தொடரில்”, அதிக
தொகுதிகளைக் கொண்ட எங்கள்
வண்ணமயமான மின்னனுப்
புத்தகங்களைக் கண்டு வாசித்துப்
பயனடையுங்கள்.

Visit ttbsa.org